செ.வெ.எண்: 13/2021 நாள்: 09.07..2021

## பத்திரிக்கை செய்தி

**தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கோபால சுந்தர ராஜ் இ.ஆ.ப., அவர்கள் செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது:-**

### கர்ப்பிணிப் பெண்களுக்கு கொரோனா தடுப்பூசி:

பொதுவாக கர்ப்பிணிப் பெண்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டால் அவர்களின் உடல்நிலை பாதிப்பதோடு மட்டுமல்லாமல் அதனால் சிசுவும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. கொரோனா தொற்று அதிகம் பாதிக்கப்பட்டுள்ள ஒரு சிலருக்கு குறைபிரசவத்தில் குழந்தை பிறப்பது மற்றும் அரிய நிகழ்வாக குழந்தை பிறப்பதற்கு முன் இறப்பதும் உண்டு. இதன் காரணமாக கர்ப்பிணிப் பெண்கள் கட்டாயம் கொரோனா தடுப்பூசியை செலுத்திக் கொள்வது அவர்களுக்கு பாதுகாப்பானது. கோவிஷீல்டு மற்றும் கோவாக்சின் தடுப்பூசிகள் இரண்டுமே மிகவும் பாதுகாப்பானது. கருவுற்ற நாளிலிருந்து எப்போது வேண்டுமானாலும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம். எனவே, கர்ப்பிணிப் பெண்கள் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் கோவிட் தடுப்பூசி செலுத்தி கொள்ளுமாறு என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கோபால சுந்தர ராஜ் இ.ஆ.ப., அவர்கள் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.